**<u>2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**
**<u>O.S.No.500/2019</u>**

01.07.2026 வா.சா. 1 திருமதி.பாத்திமா பீவி
(வா.சா.1 ன் சாட்சியம் உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.)

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கின் தபசில் சொத்து சம்பந்தமாக உரிமை ஆவணமோ அனுபவத்தை காட்டும் ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் தபசில் சொத்தில் எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் மட்டுமே உரிமை உள்ளது. எனக்கு உரிமை பட்டது சம்பந்தமாக ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்ன பத்திரம் என்றால் கிரைய பத்திரம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களில் எனக்கு உரிமைப்பட்டதாக நான் கூறும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

2. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் 2ம் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆக நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.103/2005ன் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிடும் வழக்கில் இந்த வழக்கின் வாதியோ பிரதிவாதியோ தரப்பினர் அல்ல என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் கூறிய தபசில் சொத்திற்கும் இந்த வழக்கில் உள்ள தபசில் சொத்திற்கும் என்ன சம்பந்தம் என்றால் என்ன சம்பந்தம் என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கின் தீர்ப்பை தான் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம் என்றால் ஒரு சம்பந்தமும் இல்லை.

3. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு 2ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் 1ம் பிரதிவாதிக்கு மட்டும் அனுப்பினேன். இந்த வழக்கின் பிராது தபசில் சொத்தின் எல்கை விபரம் கூறவில்லை என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் அளவுகள் கூறியுள்ளேன் என்றால் 1995 ல் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் அடிப்படையில் கூறியுள்ளேன். பிராது தபசில் சொத்தின் கிழமேல் அளவும் தென்வடல் அளவும் மற்றும் விஸ்தீர்ணமும் எனக்கு நியாபகமில்லை. 1ம் பிரதிவாதி 2000 ம் ஆண்டுக்கு பின்பு வீடு கட்டினார். 2ம் பிரதிவாதி அதில் இருந்து 4 வருடங்களுக்கு பின்பு வீடு கட்டினார். இந்த வழக்கில் எதாவது விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் பாதையில் எந்த வித ஆக்கிரமிப்பும் இருக்கக் கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளேன். பாதையில் எனக்கு உரிமையோ அனுபவமோ உள்ளது என்பதைக் காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாதைக்குரிய படம் தாக்கல் செய்துள்ளேன்.

4. எனது வீட்டின் பழைய சர்வே எண் 417. தற்போதை சர்வே எண் மாறியுள்ளதா என்று எனக்கு தெரியாது. பாதையின் தற்போதைய சர்வே எண்.504, பாதையின் சர்வே எண்ணிற்கு உட்பிரிவுகள் ஏதேனும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை பார்வையிடும் போது நான் உடனிருந்தேன். இந்த வழக்கின் 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது யாரேனும் வந்திருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது.

5. 2ம் பிரதிவாதி எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் கிழமேல் 2.2 மீ. 2.2 மீ என்பது கிழமேல் தென்தலை ஆகும். வடதலையில் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் 4.2 மீ ஆகும். வா.சா.ஆ.4 ஆவணத்தில் அளவுகள் கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் படித்துப் பார்த்துள்ளேன். அதற்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

6 அந்த அறிக்கையில் 2ம் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்று கூறியுள்ளதை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறப்படவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பாதையின் மொத்த தென்தலை கிழமேல் அளவு 2.2 மீ என்றும் ஆனால் 2.4மீ பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7. நீதிமன்ற ஆணையர் மாதிரி வரைபடத்தில் கிழமேல் தென்தலத்தில் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்று கூறப்பட்ள்ளது என்றால் சரியல்ல. பாதை கீழ்ப்பத்தில் இருந்து மேல்பக்கம் நோக்கி செல்லும் போது விரிவாக செல்லும் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே கல் இல்லை என்று கூறியுள்ளார் என்றால் அது தொலைவில் உள்ளது. சர்வே கல் எதுவும் நடப்படவில்லை. எங்கிருந்து நீதிமன்ற ஆணையர் அளந்தார் என்று நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை.

8. நீதிமன்ற ஆணையர் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் வீட்டிற்குள் சென்று அளக்கவில்லை என்றால் சரிதான். காலி மனையை மட்டும் அளந்தார். இந்த தபசில் சம்பந்தமாக நீதிமன்றத்தில் மொத்தம் எத்தனை வழக்குகள் உள்ளன என்றால் பாதைக்கு ஒரு வழக்கும், இடத்திற்கு 2 வழக்கும் உள்ளது. அ.வ.எண்.407/2015 வழக்கிலும் நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு சம்பந்தமாக ஏதேனும் ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

செய்துள்ளேன். அ.வ.எண்.407/2015 வழக்கில் நீதிமன்ற ஆணையர் அளந்த பிறகு தான் இந்த வழக்கின் விபரம் தெரியும் என்று நான் கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த வழக்கில் உள்ள எந்த ஆவணங்களையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.407/2015 வழக்கில் இந்த வழக்கின் பரிகாரம் கேட்காததற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் இல்லை.

9. 2ம் பிரதிவாதி அந்த வழக்கு சொத்தில் தான் 30 வருடங்களுக்கு மேல் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் அவர் பழைய வீட்டை இடித்து விட்டு புதிய வீடு கட்டும் போது தான் பிரச்சினை ஏற்பட்டது. புதிய வீடு எப்போது கட்டினார்கள் என்று எனக்கு நியாபகமில்லை. இந்த வழக்கு காலாவதி தோஷத்திற்கு பாதிக்கப்பட்டுள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதில் விளம்புகை பரிகாரம் கேட்பது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் 2ம் பிரதிவாதிக்கு எதிராக கேட்டுள்ள செயலுறுத்துப் பரிகாரமும் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

10. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்ட போது தாவா இடத்தை கண்டறிய முடியவில்லை என்றால் சரியல்ல. எனவே தான் தாவா சொத்தின் கிழக்கு பக்க அளவுகளும், மேற்கு பக்க அளவுகளும் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. பழைய சர்வே எண் மாறியதை காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்ட போது புகைப்படம் ஏதேனும் எடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் எனது கிரைய பத்திரத்தை வைத்து அளந்தாரா அல்லது சர்வே வரைபடத்தை வைத்து அளந்தாரா என்றால் சர்வே வரைபடத்தை வைத்து அளந்தார்.

11. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைய படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை. 2ம் பிரதிவாதியின் பத்திரத்தைப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. 2ம் பிரதிவாதிக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவரது தகப்பனார் கொடுத்ததாக கூறினார்கள். இந்த வழக்கில் 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளை என்ன காரணத்திற்காக சேர்த்துள்ளேன் என்றால் பட்டா கொடுத்ததாக தெரிய வந்ததால் சேர்த்துள்ளேன். தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லாததால் தான் நான் தீர்வை இரசீதோ உரிமை ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12. அபுல் சலீம், இப்ராஹும் ஷா மற்றும் பலருக்கு அதே பாதையில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் இந்த வழக்கில் தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கும் உரிமை இருப்பதால் நான் விளம்புகை பரிகாரம் கேட்பது சரியல்ல என்றால் சரியல்ல. நான் சுவாதீன மீட்பு பரிகாரம் கோராமல் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கை தவறாக மதிப்பீடு செய்து தவறாக முத்திரைக் கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

13. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தெற்கு பக்கம் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்றும் வடக்கு பக்கம் 0.2 மீ ஆக்கிரமிப்பு உள்ளதாக தவறுதலாக உள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவரது இடத்தில் தான் வீடு கட்டியுள்ளதால் நான் தாக்கல் செய்த இந்த வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Deposition uploaded on 01.07.2026

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.07.01 18:41:42 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.